# பாடம் 13 & 14: மோசே
# (பத்துக் கட்டளைகள்)

**விசுவாசத்தைக் கற்பிப்போருக்கான அறிவுறுத்தல்**

அடிப்படை நிலை (7 வயது) : 1 முதல் 10, 59, 60 கருத்துகளைக் கற்பிக்கவும்
இடைப்பட்ட நிலை (10 வயது) : 1 முதல் 14, 59, 60 கருத்துகளைக் கற்பிக்கவும், மேலும் 11 முதல் 58 வரையுள்ள எளிய விவரிப்புகளையும் சேர்த்துக்கொள்ளவும்
மேம்பட்ட நிலை (13 வயது) : 1 முதல் 60 கருத்துகளைக் கற்பிக்கவும்

பத்துக் கட்டளைகள் என்ற தலைப்பு இரண்டு பாடங்களுக்கு நீண்டிருக்கிறது என்பதால், இதை அவரசமாகக் கற்பிக்க வேண்டாம் என்பதைக் கவனத்தில் கொள்ளவும்.

**முந்திய பாடத்தில் இருந்து மீள்பார்வை:**
முந்திய பாடத்தில், மோசே சீனாய் மலையில் பத்துக் கட்டளைகளைப் பெற்று, அவற்றை இஸ்ரயேல் மக்களுக்கு வழங்கினார் என்பதை நாம் கற்றோம். இந்த பாடத்தில், பத்துக் கட்டளைகள் கிறிஸ்தவர்களாகிய நமக்கும் பொருந்தும், கடவுளின் மக்களாக கிறிஸ்தவ வாழ்வை நாம் வாழ்வதற்கான திட்டவட்ட விதிகளாக அவை இருக்கின்றன என்பதைப் பற்றி நாம் கற்போம்.

**தற்போதைய பாடம்:**
1. கடவுள் சீனாய் மலையில் மோசேக்கு பத்துக் கட்டளைகளை வழங்கினார் (விடுதலைப் பயணம் 20:1-17, இணைச்சட்டம் 5:6-29). இந்த பத்துக் கட்டளைகளும் சொற்பதின்மம் என்றும் அழைக்கப்படுகின்றன, இதற்கு தூய மலையில் கடவுள் தமது மக்களுக்கு வெளிப்படுத்திய “பத்து வார்த்தைகள்” என்பது பொருள் (கதிம 2056). சொற்பதின்மம் என்பது இரண்டு கற்பலகைகளில் பொறிக்கப்பட்ட கடவுளின் உண்மை வார்த்தைகள்; அவை மோசேயால் உருவாக்கப்பட்ட கட்டளைகள் அல்ல.

2. இஸ்ரயேலருக்கும் கடவுளுக்கும் இடையே நிகழ்ந்த உடன்படிக்கையின் ஒரு பகுதியை இந்தக் கட்டளைகள் உருவாக்குகின்றன. அவர்களுக்குத் தாம் செய்த அனைத்திற்காகவும், தமது கட்டளைகளுக்கு கீழ்ப்படிய வேண்டும் என்ற நிபந்தனையோடு என்றென்றும் தமது மக்களாக இருக்குமாறு இஸ்ரயேலரை கடவுள் அழைத்தார். அவர்கள் தூய வாழ்வு வாழ வேண்டும், அதனால் தங்கள் கடவுளின் தூயநிலையை அவர்கள் பிரதிபலிப்பர். மற்ற வார்த்தைகளில், கடவுளின் கட்டளைகளுக்குக் கீழ்ப்படிவது கடவுளின் மக்களாக அவர்களின் அடையாளமாக இருக்கும்.

இஸ்ரயேலர், கடவுளின் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களாக, இந்த கட்டளைகளைப் பின்பற்ற ஒப்புக் கொண்டனர், கடவுள் தமது பங்கிற்கு, அவர்களுக் ஆசியளிப்பதாக வாக்களித்தார். ஓரேபு அல்லது சீனாய் மலையில் கடவுள் செய்த உடன்படிக்கையின் காரணமாக மட்டுமே இந்தக் கட்டளைகள் கடவுளின் மக்களின் மீது பிணைந்துள்ளன (கதிம 2060). இது கடவுள் சொல்கின்ற விதம், “நீங்கள் எனது மக்கள், ஏனெனில் நானே உங்களை மீட்டேன்... ஆகவே நீங்கள் இப்படி வாழ வேண்டுமென நான் விரும்புகிறேன்...” கடவுளோடு மனிதர் கொண்டுள்ள உடன்படிக்கையின் விளைவே அறநெறி வாழ்வு என்பதை இது காட்டுகிறது (கதிம 2061), மேலும் இது “ஆண்டவரின் அன்பு முயற்சிக்கான பதிலிறுப்பு” (கதிம 2062).

3. ஆகவே, இஸ்ரயேலரை அடிமைத்தனத்தில் இருந்து விடுவித்தவர் கடவுள் என்றச் சூழமைவில் இந்த பத்துக் கட்டளைகளைப் புரிந்துகொள்ள வேண்டும். அதே போன்று, நம்மை பாவம் மற்றும் இறப்பின் அடிமைத்தனத்தில் இருந்து அவர் நம்மை விடுவிக்கிறார். இந்தக் கட்டளைகள் “பாவத்தின் அடிமைத்தனத்தில் இருந்து விடுவிக்கிற வாழ்வின் நிபந்தனைகளின்” தொகுப்பாக, “வாழ்வுக்குப் பாதையாக...” இருக்கின்றன (கதிம 2057). அவரது சுதந்திரமான மக்களாக இருக்க நாம் எப்படி வாழ வேண்டுமென்று கூறுகின்றன. இந்தக் கட்டளைகள் பரிந்துரைகளாக அல்லது முன்மொழிவுகளாக அன்றி, அவை அழைக்கப்படுவது போலவே, கட்டளைகளாக இருக்கின்றன.

4. இந்த பத்துக் கட்டளைகளை ''அன்பின் சட்டத்தை''த் தொடர்புப்படுத்தியும் புரிந்துகொள்ள வேண்டும், ஏனெனில் கடவுளிடம் அன்பு மற்றும் அடுத்திருப்பவரிடம் அன்பு ஆகியவை கத்தோலிக்கராக நமது அறநெறி எல்லாவற்றையும் அடக்கியுள்ளன. இறைச் சட்டத்தில் தரப்பட்டுள்ள மற்றும் இறைவாக்கினர்கள் கற்பித்த அனைத்தும் அன்பின் சட்டத்தில் சுருக்கமாக இருக்கின்றன (மத்தேயு 22:40), மேலும் இதையே நாம் பத்துக் கட்டளைகளில் காண்கிறோம். அவை நமக்குத் தேவையான கடவுளிடம் அன்பு மற்றும் அடுத்திருப்பவரிடம் அன்பு ஆகியவற்றின் அடிப்படைத் தரநிலைகளை நமக்கு கற்பிக்கின்றன.

5. கடவுளின் மகனாகிய இயேசு, தமது மண்ணகத் திருப்பணியின் பொழுது, கடவுளால் தரப்பட்ட பத்துக் கட்டளைகளுக்குக் கீழ்ப்படிவதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தினார் (கதிம 2052-53). எனினும், பத்துக் கட்டளைகளுக்கு வெறுமனே செயல்பாட்டில் கீழ்படிவதை விடவும் மிக முக்கியமான சிலவற்றை அவர் காட்டிச் சென்றார், அதாவது, கட்டளைகளின் மிக அடிப்படைத் தேவைகளை விடவும் பத்துக் கட்டளைகளின் உணர்வுந்தலை முயன்று வாழ்வது மிகச் சிறப்பானது (கதிம 2054). பத்துக் கட்டளைகளுக்கான இந்தக் கீழ்ப்படிதல் புறநிலைச் செயல் மட்டுமன்று, மாறாக அதை விட மேலாக, இதயத்தின் பாங்கிற்குரியது. நமது இதயங்கள் நமது புறநிலைச் செயல்களைப் போன்று தூய்மையாக இருக்க வேண்டும். இந்த பாடத்தைத் தொடர்ந்து கற்கும் பொழுது, பத்துக் கட்டளைகளின் இறுதி இரண்டில் இதயத் தூய்மைக்கான விடயங்கள் பிரதிபலிக்கும்.

6. இந்த பத்துக் கட்டளைகள் ''ஒத்திசைந்த முழுமையாக'' இருக்கின்றன (கதிம 2069). அவை எல்லாம் ஒன்றின் மீது மற்றது தாக்கம் கொண்டுள்ளன. கட்டளைகளின் ஒரு பகுதி கடவளை அன்பு செய்வது பற்றியது, மற்றப் பகுதி நமக்கு அடுத்திருப்பவரை அன்பு செய்வது பற்றியது. ஆனால் ஒருவர் கடவுளால் படைக்கப்பட்டோரை அன்பு செய்யாமல் கடவுளை அன்பு செய்ய முடியாது; அவ்வாறே, ஒருவர் தம்மைப் படைத்தவரை ஆராதிக்காமல் தமக்கு அடுத்திருப்பவரை அன்பு செய்ய முடியாது.

7. இந்த பத்துக் கட்டளைகள் உண்மையில் மனிதராக இருப்பதன் பொருளை நமக்கு கற்பிக்கின்றன (கதிம 2070). ''மனித நபரின் இயல்பில் பெற்றுள்ள அடிப்படை உரிமைகளை'' அவைப் பாதுகாக்கின்றன. பொது அறிவின் வழியாகப் புரிந்துகொள்ளக் கூடிய உண்மையான விதிகளாக அவை இருக்கின்றன (கதிம 2071), ஆனால் ''பாவம் நிறைந்த மனிதகுலத்திற்கு இந்த வெளிப்பாடு தேவைப்பட்டதால்'' கடவுள் அவற்றை வெளிப்படுத்தத் தேர்ந்து கொண்டார். வெளிப்படையாக, பொது அறிவு மட்டுமே போதுமானதன்று, ஏனெனில் மனிதகுலத்தின் பொது அறிவு பாவத்தால் சிதைவுற்றுள்ளது.

8. இந்த பத்துக் கட்டளைகள் உலகளாவியவை. அவை மனிதராக இருப்பதன் பொருளாக இருக்கின்றன. ஒரு மனிதர் கடவுளுக்கும் தமது உடன் மனிதர்களுக்கும் கடமைப்பட்டுள்ள அடிப்படையை அவைக் காட்டுகின்றன, ''… எவரும் அவற்றை விலக்க முடியாது''. ''பத்துக் கட்டளைகள் கடவுளால் மனித இதயத்தில் பொறிக்கப்பட்டுள்ளன'' (கதிம 2072). கடவுள் இந்த வாழ்வின் சட்டங்களைத் தெளிவாக நமக்கு கூறாவிடினும், இந்தச் சட்டங்கள் நமது மனச்சான்றில் பிணைந்துள்ளன என்பதே இதன் பொருள்.

9. வெவ்வேறு கிறிஸ்தவர்கள் மரபு வழியாக பத்துக் கட்டளைகளை வேறுபட்ட விதங்களில் பிரிக்கின்றனர். கத்தோலிக்கத் திருச்சபையில், ஹிப்போ புனித அகுஸ்தீன் (நான்காம் நூற்றாண்டில்) கற்பித்தவாறு மறைநூலில் உள்ள பத்துக் கட்டளைகள் பிரிக்கப்பட்டுள்ளன. முதல் மூன்று கட்டளைகள் கடவுளுடனான நமது உறவுநிலையைப் பற்றியவை. மனிதர்களாக நமது படைப்பாளரை அன்பு செய்ய, மதிக்க, போற்ற நமக்கு முதன்மை கடமை உண்டு. நாம் அவரது உருவிலும் சாயலிலும் படைக்கப்பட்டுள்ளதால், ஆழ்ந்த மரியாதை உணர்வுடன் அவரை அணுகுவது நமது புனித கடமையாகவும் மிகச் சரியானதாகவும் இருக்கிறது. அடுத்த ஏழு கட்டளைகளும் நமது வாழ்வில் இணைந்திருக்கின்ற மற்ற மனிதர்களுடனான நமது உறவுநிலை பற்றியதாக இருக்கின்றன. இதன் காரணமாக, மனிதகுலத்தின் உடன் சகோதர சகோதரிகளுடன் நீதியும் அமைதியும் முன்னிலை வகிக்கும் ஒரு சமூகத்தைக் கட்டியெழுப்பும் கடமையை நாம் கொண்டுள்ளோம். நாம் அனைவரும் மனிதர்கள் என்பதால், ஒருவர் மற்றவருடன் வேறுபட்ட விதங்களில் இணைந்திருக்கிறோம் என்பது சிறப்பான உண்மையாக இருக்கிறது.

10. பத்துக் கட்டளைகள்:

முதலாவது: **நானே உன் கடவுளாகிய யாவே (ஆண்டவர்)… என்னைத் தவிர வேறு தெய்வங்கள் உனக்கிருத்தல் ஆகாது.**
(மற்ற அனைத்தையும் விட கடவுளை அதிகமாக அன்பு செய். கடவுளை விட வேறெதையும் உனது வாழ்வில் முக்கியமானதாக ஆக்கிக் கொள்ளாதே.)

இரண்டாவது: **உன் கடவுளாகிய யாவேயின் (ஆண்டவர்) பெயரை வீணாகப் பயன்படுத்தாதே.**
(கடவுளின் பெயரை அன்போடும் மரியாதையோடும் மட்டும் பயன்படுத்து.)

மூன்றாவது: **ஓய்வு நாளைத் தூயதாகக் கடைபிடிப்பதில் கருத்தாய் இரு.**
(உயிர்ப்பின் நாளில் ஓய்ந்திருந்து, ஆண்டவரின் நாளுக்கு மதிப்பளி.)

நான்காவது: **உன் தந்தையையும் தாயையும் மதித்து நட.**
(உனது பெற்றோருக்கு அன்பும் மரியாதையும் செலுத்து.)

ஐந்தாவது: **கொலை செய்யாதே.**
(ஒருபோதும் மற்றவரைப் புண்படுத்தாதே.)

ஆறாவது: **விபச்சாரம் செய்யாதே.**
(எப்பொழுதும் உனது கணவன் அல்லது மனைவிக்கு உண்மையாய் இரு.)

ஏழாவது: **களவு செய்யாதே.**
(உனக்கு உரியதாக இல்லாததை ஒருபோதும் எடுக்காதே.)

எட்டாவது: **பிறருக்கு எதிராகப் பொய்ச் சான்று சொல்லாதே.**
(எப்பொழுதும் உண்மையே பேசு.)

ஒன்பதாவது: **பிறர் மனைவி மீது ஆசை கொள்ளாதே.**
(மற்ற மக்களின் உறவுநிலைகள் குறித்து பொறாமை கொள்ளாதே.)

பத்தாவது: **பிறருக்கு உரியது எதையும் கவர்ந்திட விரும்பாதே.**
(மற்ற மக்கள் வைத்திருப்பது குறித்து பொறாமை கொள்ளாதே.)

11. **முதலாம் கட்டளை: நானே உன் கடவுளாகிய யாவே (ஆண்டவர்)… என்னைத் தவிர வேறு தெய்வங்கள் உனக்கிருத்தல் ஆகாது.”** (விப 20:-6, இச 5:7-10)

கடவுளின் இருப்பையும் மனிதர்களாகிய நமது வாழ்வில் அவருக்குச் சரியான இடத்தையும் இந்தக் கட்டளை நமக்கு நினைவூட்டுகிறது. ஒரே கடவுளாக அவர் தொடர்ந்து இருக்கிறார், மேலும் நன்மையான அனைத்தையும் படைத்தவர் அவரே என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். வாழ்வை வழங்குகிறவராக மற்றும் காக்கிறவராக அவரது மேன்மையை நாம் கண்டுணர வேண்டும். நமது வாழ்வில் எதுவும் அவருக்கு மாற்றாகாது. ஆறுதல், பராமரிப்பு, மற்றும் ஆதரவின் உடனடி ஆதாரங்களாகக் கருதி எந்த நபரின் அல்லது பொருளின் சோதனைக்கு நாம் உள்ளாகிவிடக் கூடாது. நமது வாழ்வில் கடவுளின் இடத்தை மாற்றும் அச்சுறுத்தலைத் தருகின்ற அனைத்தும் நல்லதல்ல.

*கதிம 2086:* “முதல் கட்டளை விசுவாசம், எதிர்நோக்கு, மற்றும் பிறரன்பைத் தழுவி நிற்கிறது. ‘கடவுள்’ என்று நாம் கூறும் பொழுது, ஒரு நிலையான, மாறாமல் இருக்கிறவரை, எப்போதும் ஒரே, நம்பகமான மற்றும் நீதியான, எந்த தீமையும் இல்லாதவரை நாம் ஒப்புக்கொள்கிறோம். அதைத் தொடர்ந்து நாம் அவசியமாக அவரது வார்த்தைகளை ஏற்க வேண்டும், அவரில் முழுமையான விசுவாசம் கொள்ள வேண்டும் மேலும் அவரது அதிகாரத்தை ஏற்க வேண்டும். அவர் எல்லாம் வல்லவராக, இரக்கமுள்ளவராக, மற்றும் முடிவற்ற நன்மையளிப்பவராக இருக்கிறார். யார் அவரில் எல்லா எதிர்நோக்கையும் வைக்க மாட்டார்? அவர் நம்மீது பொழிந்த அன்பையும் நன்மைத்தனத்தின் செல்வங்களையும் தியானிக்கும் பொழுது யார் அவரை அன்பு செய்ய மாட்டார்? ஆகவே மறைநூலில் தமது கட்டளைகளின் தொடக்கம் மற்றும் முடிவில் கடவுள் பயன்படுத்தும் சூத்திரம்: ‘நானே ஆண்டவர்.’”

12. நாம் மூடநம்பிக்கைக்கு ஆட்படாதவாறு கவனமாக இருக்க வேண்டும். மூடநம்பிக்கை என்பது கடவுள் அல்லாத ஆதாரங்கள் மீது அதிகாரத்தையும் கட்டுப்பாட்டையும் சாற்றுவதை

உள்ளடக்கியது. இந்த ஆதாரங்களிடம் அதிகாரத்தைச் சாற்றுவதால், அறிந்தோ அறியாமலோ கடவுளின் இயலுமையைத் தாண்டி நம்மைப் பாதுகாக்கும் என்று நாம் ஏற்றுக்கொள்கிறோம்.

*கதிம 2111:* ‘‘மூடநம்பிக்கை என்பது சமய உணர்வில் இருந்து விலகச் செய்வதாகவும், இத்தகைய உணர்வைத் திணிக்கம் நடைமுறைகளாகவும் இருக்கிறது. அது உண்மை கடவுளுக்கு நாம் செலுத்தும் வழிபாட்டையும் பாதிக்கக்கூடும், எடுத்துக்காட்டாக, சட்டப்பூர்வ அல்லது அவசியம் இல்லாத சில நடைமுறைகளுக்கு ஒருவித மாந்தரீக முக்கியத்துவத்தை ஒருவர் சாற்றுவது. செபங்கள் அல்லது அருட்கருவிகளின் அடையாளங்கள் கோருகின்ற அகநிலை இயல்பைத் தாண்டி, வெறும் புறநிலைச் செயல்பாட்டை முன்னிறுத்திச் சாற்றுவது, மூடநம்பிக்கையில் வீழ்த்திவிடும்.’’

13. நாம் பலதெய்வக் கொள்கையை, அதாவது, ஒன்றுக்கும் மேற்பட்ட இறை தனிப்பொருள் மீதான நம்பிக்கையை நிராகரிக்க வேண்டும்.

*கதிம 2113:* ‘‘சிலைவழிபாடு என்பது தவறான பிறசமய வழிபாட்டை மட்டும் குறிப்பதன்று. இது தொடர்ந்து விசுவாசத்திற்கு நிலையான சோதனையாக இருக்கிறது. சிலைவழிபாடு என்பது கடவுளாக ஒன்றுக்கு இறைத்தன்மை கொடுப்பதில் அடங்கியுள்ளது. கடவுளின் இடத்தில் படைப்புயிர்களை வைத்து மரியாதை செலுத்தும் பொழுதெல்லாம் மனிதர் சிலைவழிபாடு செய்கின்றனர், அது தெய்வங்களாக அல்லது அலகைகளாக (எடுத்துக்காட்டாக, சாத்தானியம்), அதிகாரம், இன்பம், இனம், மூதாதையர், தகுதிநிலை, பணம், இன்னும் பல. இயேசு கூறுகிறார், ‘‘நீங்கள் கடவுளுக்கும் செல்வத்துக்கும் பணிவிடை புரிய முடியாது.’’ ‘‘விலங்கை’’ ஆராதிக்காமல், அத்தகைய உருவகிப்பு வழிபாட்டை மறுத்ததால் பலர் மறைச்சாட்சிகளாக இறந்தனர். கடவுளே தனித்துவமான ஆண்டவர் என்பதை சிலைவழிபாடு நிராகரிக்கிறது; அது கடவுளுடனான ஒன்றிப்புக்கு ஒவ்வாததாக இருக்கிறது.’’

14. குறிகூறுதல் மற்றும் பில்லிசூனிய நடைமுறைகளும் தடை செய்யப்பட்டுள்ளன.

*கதிம 2116:* ‘‘எல்லா வடிவிலான குறிகூறுதலும் நிராகரிக்கப்பட வேண்டும்: சாத்தான் அல்லது அலகைகளின் உதவியை நாடல், இறந்தோரிடம் பேசுதல் அல்லது எதிர்காலத்தைக் ‘கணிக்கும்’ தவறான நடைமுறைகள். சாதகம், சோதிடம், கைரேகை பார்த்தல், சகுனம் மற்றும் கணிப்பை விளக்குதல், தொலை மனக்காட்சி நிகழ்வுகள், நேரம், வரலாறு மீது அதிகாரம் செலுத்தும் ஆசையில் ஊடுகைகளை நாடுதல், மேலும், இறுதி பகுப்பாய்வில், மற்ற மனிதர்களையும், மறைவான அதிகாரங்களையும் அடைய விரும்புதல். கடவுளுக்கு மட்டும் நாம் செலுத்த வேண்டிய மதிப்பு, மரியாதை, மற்றும் அன்பின் அச்சத்திற்கு அவை முரண்படுகின்றன.’’

கதிம 2117: ‘‘அமானிட சக்திகளைப் பணிய வைக்க முயற்சிக்கிற, மாயவித்தை அல்லது சூனியத்தின் எல்லா நடைமுறைகளும், ஒருவரின் சேவைக்கு அவற்றை வைத்து, மற்றவர்கள் மீது இயற்கைக்கு மேலான சக்தியைப் பெறுவது -- தங்களின் உடல்நலத்தை மீட்டெடுக்க என்றாலும் -- சமயத்தின் நற்பண்புக்கு முரணானது. ஒருவரைத் துன்புறுத்தும் நோக்கத்தில், அல்லது அலகைகளின் தலையீட்டை நாடுவதில் துணை போனால் இந்த நடைமுறைகள் மிகவும் கண்டிக்கப்பட வேண்டும். மயக்கும் ஆற்றலைக் கொண்டிருப்பதும் கண்டிக்கத்தக்கது. ஆவிகள் நம்பிக்கை பெரும்பாலும் குறிகூறுதல் அல்லது மாயவித்தை நடைமுறைகளைக் குறிக்கிறது; திருச்சபை தன் பங்கிற்கு இதற்கு எதிராக விசுவாசிகளை எச்சரிக்கிறது. தீய சக்திகளை அழைத்து செய்கின்ற மரபுசார் நலமாக்கல்களை நாடுதல் அல்லது மற்றவரின் நம்பத்தன்மையை ஏய்த்தல் ஏற்க முடியாதது.’’

15. முதல் கட்டளை நாம் கடவுளைச் சோதிக்க அனுமதிக்கப்படவில்லை என்பதையும் குறிக்கிறது, ஏனெனில் அவ்வாறு செய்வது ‘‘நமது படைப்பாளரான ஆண்டவருக்கு நாம் செலுத்தும் மரியாதை மற்றும் நம்பிக்கையைக் காயப்படுத்தும்’’ (கதிம 2119). அது புனிதக் கெடுப்பை, அதாவது தூயப் பொருட்கள், நபர்கள், மற்றும் இடங்களைத் தகுதியற்ற முறையில் அணுகுவதைத் தடை செய்கிறது (கதிம 2120). அதில் தனி முக்கியமானது கிறிஸ்துவாகவே இருக்கிற நற்கருணைக்கு எதிரான புனிதக்கெடுப்பு சாவானப் பாவமாகும். ஆசிகள் மற்றும் அருளடையாளங்கள் போன்ற ஆன்மிக விடயங்களை வாங்குகிற மற்றும் விற்கிற நடைமுறையான சீமோனியத்தையும் இக்கட்டளை தடை செய்கிறது (கதிம 2121).

16. சில மனிதர்கள் கடவுள் மீதான விசுவாசத்தை மொத்தமாக நிராகரிக்கின்றனர், ஏனெனில் தங்களுக்கு மேலான ஒருவர் இருக்கின்ற மெய்மை மற்றும் தங்களின் சொந்த இருப்புக்காக அவரைச் சார்ந்து இருப்பதை அவர்களால் ஏற்க முடியவில்லை (கதிம 2126). அறிவியல் முறையில் எண்பிக்கப்படக் கூடியவை மட்டுமே நம்பத் தகுந்தவை என்னும் கருத்தியல் முன்தீர்ப்புகளைக் கொண்டோரும் இருக்கின்றனர். இன்னும் கடவுளின் இருப்பைப் புறக்கணிக்க விரும்பி, உலக செல்வம், உடல் நலம், அல்லது தங்கள் தொழில்கள் போன்ற அவர்களின் உடனடி ஆர்வங்களில் கவனம் செலுத்துவோரும் இருக்கின்றனர், அவை கடவுளே இல்லை என்பது போல அவர்களை நடத்துகின்றன (கதிம 2127-29).

*மகிழ்ச்சியும் எதிர்நோக்கும்,* 19: "தங்கள் இதயங்களில் இருந்து கடவுளை விருப்பத்துடன் வெளிநிறுத்துவோர் மற்றும் சமயக் கேள்விகளைத் தவிர்க்க முயற்சிப்போர் தங்கள் மனச்சான்றுகளின் வழிகாட்டல்களைப் பின்பற்றுவதில்லை என்பதை மறுக்க இயலாது. ஆகவே, அவர்கள் பழிச்சொல்லில் இருந்து விடுபட்டவர்கள் அல்லர்."

17. **இரண்டாம் கட்டளை: "உன் கடவுளாகிய யாவேயின் (ஆண்டவர்) பெயரை வீணாகப் பயன்படுத்தாதே.** (விப 20:7, இச 5:11)

புனித மறைநூலில் கடவுள் வெளிப்படுத்திய எல்லா வார்த்தைகளின் நடுவே, ஒரு வார்த்தை தனியாக நிற்கிறது: அவரது தூயப் பெயரின் வெளிப்பாடு. கடவுள் தம்மில் நம்பிக்கை கொள்வோரிடம் தமது பெயரை ஒப்படைத்தார். அவர் தமது சொந்த மறைபொருளை நமக்கு வெளிப்படுத்த இவ்வாறு செய்தார். அவரது பெயரின் வெளிப்பாட்டில், அவருடன் நெருக்கமான உறவுநிலைக்கு அவர் நம்மை இழுக்கிறார். இதனால் அவரது பெயரை பொறுப்பற்ற விதத்தில் பயன்படுத்த முடியாது. அது மதிக்கப்பட வேண்டும், ஒருபோதும் தவறாகப் பயன்படுத்தப்படக் கூடாது. நாம் கடவுளை வழிபடும் பொழுதும் நாம் அவரைப் போற்றும் பொழுதும் மட்டுமே கடவுளின் தூயப் பெயரை நாம் அழைக்கிறோம். கடவுளின் தூயப் பெயரை தகுதியற்ற வெளிப்பாடுகளில் பயன்படுத்துவது, அதாவது இந்நாட்களில் மக்கள் ஊடகத்தில் பொதுவாகக் கேட்பது ஆழ்ந்த வருத்தமளிக்கிறது. மரியாதையின்றி அல்லது தகுதியின்றி கடவுளின் பெயர் பயன்படுத்தப்படும் பொழுது, அது இறைநிந்தை என்று அழைக்கப்படுகிறது, அது ஒரு சாவான பாவமாகும் (கதிம 2148).

*கதிம 2143:* "வெளிப்படுத்தப்பட்ட எல்லா வார்த்தைகளின் நடுவே, ஒன்று தனித்துவமாக இருக்கிறது: வெளிப்படுத்தப்பட்ட கடவுளின் பெயர். தம்மில் நம்பிக்கை கொண்டோரிடமே கடவுள் தமது பெயரை ஒப்படைக்கிறார்; அவர் தமது தனிப்பட்ட மறைபொருளில் அவர்களுக்குத் தம்மை வெளிப்படுத்துகிறார். ஒரு பெயரின் கொடையானது நம்பிக்கை மற்றும் நெருக்கத்தைச் சார்ந்துள்ளது. 'ஆண்டவரின் பெயர் தூயது.' இதன் காரணமாக மனிதர் அதைத் தவறாகப் பயன்படுத்தக்கூடாது. மனிதர் அதை அமைதியாக மனதில் வைத்து, அன்பாக ஆராதிக்க வேண்டும். போற்றுதல், வாழ்த்துதல், மற்றும் மாட்சிப்படுத்தலைத் தவிர வேறு எந்தப் பேச்சிலும் மனிதர் அதைப் பயன்படுத்தக்கூடாது."

*கதிம 2146:* "இரண்டாம் கட்டளை கடவுளின் பெயரை தவறாகப் பயன்படுத்துவதை, அதாவது, கடவுள், இயேசு கிறிஸ்து, மேலும் கன்னி மரியா மற்றும் அனைத்து புனிதர்களின் பெயர்களைக் கூடப் பொருத்தமின்றிப் பயன்படுத்துவதை தடை செய்கிறது."

*திருப்பாடல் 29:2:* "யாவேயின் (ஆண்டவரின்) பெயருக்கேற்ற மாட்சியை அவருக்கு உரித்தாக்குங்கள்; தூயநிலையின் பேரொளிர்வில் யாவேயை (ஆண்டவரை) ஆராதியுங்கள்."

18. நாம் உறுதியிடும், அதாவது திண்ணமான வாக்குறுதி அளிக்கும் நேரங்களில் கடவுளை நமது சாட்சியாக அழைக்கிறோம். கடவுளின் பெயர் தூயது என்பதால், அற்ப விடயங்கள் அல்லது அதைக் கோர உரிமையற்ற அதிகாரி கேட்கும் பொழுது அத்தகைய உறுதியிடல் ஒருபோதும் செய்யக்கூடாது (கதிம 2155). அதைக் கேட்க உரிமையற்ற மக்கள் அவ்வாறு உறுதியிட நம்மை வற்புறுத்தினால், நாம் அதை மறுக்க வேண்டும். மற்ற மக்களின் மாண்பு அல்லது திருச்சபைக்கு தீங்கைக் கொணரும் என்றாலும் நாம் அதை மறுக்க வேண்டும். கடவுளின் பெயரால் நாம் வாக்குறுதி அளிக்கும் விடயங்களில், இந்த வாக்குறுதிகள் மதித்து நிறைவேற்றப்பட வேண்டும். கடவுளின் பெயரால் அளிக்கப்பட்ட ஒரு வாக்குறுதி மதித்து நிறைவேற்றப்படாத பொழுது, அந்த வாக்குறுதியை அளித்த நபர் கடவுளைப் பொய்யர் ஆக்குகிறார் (கதிம 2147).

19. உண்மையில், நமது சொந்தப் பெயர்களும் புனிதமானவை, ஏனெனில் ‘‘ஒவ்வொருவரையும் கடவுள் பெயர் சொல்லி அழைத்துள்ளார்’’ மேலும் ‘‘பெயர் என்பது ஒரு நபரின் குறியீடாக இருக்கிறது’’ (கதிம 2158). ஆகவே, ஒரு பெயரைத் தாங்கியவரின் மாண்பை நாம் மதிப்பதன் அடையாளமாக, அந்த நபரின் பெயரை மரியாதை உணர்வுடன் அழைக்க வேண்டும்.

20. **மூன்றாம் கட்டளை: ‘‘ஓய்வு நாளைத் தூயதாகக் கடைபிடிப்பதில் கருத்தாய் இரு.’’** (விப 20:8-11, இச 5:12-15)

கடவுள் தமது படைப்பு வேலைக்குப் பிறகு ஏழாம் நாளில் ஓய்ந்திருந்ததால், தமது படைப்புத் திட்டத்தைப் பின்பற்ற ஓய்வு நாளைக் கடைபிடிக்குமாறு அவர் நமக்கு கட்டளையிடுகிறார். இந்தக் கட்டளை ஒரு காரணமற்றப் பரிந்துரை அன்று. மற்ற நாட்களில் வாழ்வு சார்ந்த விடயங்களில் மூழ்கியிருக்கும் நாம், ஒரு குறிப்பிட்ட நாளை அவருடனான நமது உறவைப் புதுப்பிக்க, அவரைப் புகழ்வதில், ஆராதிப்பதில், மற்றும் வழிபடுவதில் நேரம் செலவிட வேண்டுமென அவர் கோருகிறார்.

21. யூதர்கள் வெள்ளிக்கிழமை கதிர்மறைவு நேரம் முதல் சனிக்கிழமை கதிர்மறைவு நேரம் வரை ஓய்வு நாளை (சப்பாத்) கடைபிடித்தனர். கிறிஸ்தவர்களுக்கு, நமது ஓய்வு நாள் கொண்டாட்டம் ஞாயிற்றுக்கிழமை வருகிறது, ஏனெனில் அது நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்து உயிர்த்தெழுந்த நாளாக இருக்கிறது. இந்நாளில், அறிவிக்கப்படும் இறைவார்த்தையைக் கேட்கவும், நற்கருணை அருளடையாளத்தை உட்கொள்ளவும் இயேசுவைப் பின்பற்றும் நாம் அனைவரும் ஒன்றுகூடி வர வேண்டும், அதனால் அவரது பாடுகள், இறப்பு, மற்றும் உயிர்ப்பை நமது மனதில் கொணர முடியும். இது ஒரு கொண்டாட்டத்தின் நேரமாக இருக்கிறது.

*புனிதமிகுச் சங்கம்,* 106: ‘‘பாஸ்கா மறைபொருளை ஒவ்வோர் எட்டாம் நாளிலும் திருச்சபை கொண்டாடுவது, கிறிஸ்து உயிர்த்தெழுந்த அதே நாளில் இருந்து திருத்தூதுவ மரபில் தொடங்கியது; இந்த நல்ல காரணத்திற்காக, பின்னர் இது ஆண்டவரின் நாள் என்றப் பெயரைப் பெற்றது.’’

*கஒகு 1247:* ‘‘ஞாயிற்றுக்கிழமைகளிலும் மற்றத் தூயக் கடன் நாட்களிலும், விசுவாசிகள் திருப்பலியில் பங்கேற்கக் கடமைப்பட்டுள்ளனர். மேலும், அவர்கள் கடவுளுக்குச் செய்யும் வழிபாடு, ஆண்டவரின் நாளின் மகிழ்ச்சி, அல்லது மனம் மற்றும் உடலுக்குத் தேவையான இளைப்பாறுதலுக்குத் தடையாகும் வேலைகள் மற்றும் செயல்களைத் தவிர்க்க வேண்டும்.’’

*கஒகு 1248 §1:* ‘‘விழா நாளில் அல்லது முந்திய நாள் மாலையில் கத்தோலிக்க ரீதியில் சிறப்பிக்கப்படும் ஒரு திருப்பலியில் பங்குபெறுகின்ற ஒரு நபர், திருப்பலியில் பங்கேற்கும் கடமையை நிறைவு செய்கிறார்.’’

*கஒகு 1248 §2 (கதிம 2183):* ‘‘திருப்பணியாளர் இல்லாமல் அல்லது வேறொரு காரணத்தால் நற்கருணை கொண்டாட்டத்தில் பங்கேற்றல் சாத்தியமற்றது ஆகும்போது, மறைமாவட்ட ஆயரின் ஏற்பாட்டின்படி, பங்குதள ஆலயம் அல்லது மற்றொரு புனித இடத்தில் நடைபெறும் இறைவார்த்தை வழிபாட்டில் பங்கேற்கவோ அல்லது பொருத்தமான நேரத்தில் ஒரு குடும்பமாக அல்லது குடும்பங்களின் குழுக்களாக இணைந்து செபிக்க விசுவாசிகள் கேட்கப்படுகின்றனர்.’’

22. ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமை உள்ளிட்ட கடன் நாட்களில் திருப்பலிக்குத் தவறுதல் வழியாக ஓய்வு நாளைக் கடைபிடிக்கும் தங்கள் கடமையில் வேண்டுமென்றே தவறுவோர் சாவானப் பாவம் செய்கின்றனர் என நமக்கு கற்பிக்கப்பட்டுள்ளது. நோயுற்ற ஒருவர், அல்லது வீட்டிலுள்ள குழந்தைகள் அல்லது நோயுற்ற முதியோரைக் கவனிக்கிறவர், முக்கியமான சமூகச் சேவைக்குச் செல்கிறவர், அல்லது நல்ல காரணத்திற்காக குரு அல்லது ஆயரிடம் விலக்கு பெற்றவர் போன்ற தீவிர காரணமுள்ள நேரங்களில் மட்டுமே திருப்பலிக்குத் தவற அனுமதி உண்டு (கதிம 2181). ஆனால் அத்தகைய ஏற்கத்தகு காரணங்களும் திருப்பலிக்கு வழக்கமாகச் செல்லாதிருக்கச் செய்துவிடக் கூடாது (கதிம 2185).

நமது கிறிஸ்தவ வாழ்வில் ஓய்வு நாளையும் நற்கருணையையும் முக்கியமாகப் பார்க்காமல் மற்ற நாட்களில் நமது வாழ்வின் மற்ற விடயங்களை அடையக் கடினமாக உழைப்பதில் எந்த பயனும் இல்லை, ஏனெனில் கிறிஸ்துவின் தூயத் திருச்சபையின் முழுமையான ஆன்மிகச்

செல்வத்தை நற்கருணையே கொண்டுள்ளது: இயேசுவே, நமது பாஸ்காவாகவும் வாழ்வின் அப்பமாகவும் இருக்கிறார்.

23. **நான்காம் கட்டளை: "உன் தந்தையையும் தாயையும் மதித்து நட."** (விப 20:12, இச 5:16)

இந்தக் கட்டளை மற்ற மனிதர்களுடனான நமது உறவுநிலையை நோக்கி நமது கவனத்தைத் திருப்புகிறது. இந்த மண்ணகத்தில் நமது மனித வாழ்வின் ஆதாரமாக இருப்பதால் மட்டுமன்றி, நமக்கு உணவளிக்கிற மற்றும் நம்மை நாமே கவனித்துக் கொள்ளும் திறன்பெறும் வரை நம்மை வளர்க்கிற புனிதக் கடமையைச் செய்ததாலும் நாம் அவர்களுக்கு கடமைப் பட்டுள்ளோம்.

*மாற்கு 10:19:* "உமக்கு கட்டளைகள் தெரியுமே: கொலை செய்யாதே; விபசாரம் செய்யாதே; களவு செய்யாதே; பொய்ச்சான்று சொல்லாதே; வஞ்சித்துப் பறிக்காதே; உன் தாயையும் தந்தையையும் மதித்து நட."

எபேசியர் 6:1-3: "பிள்ளைகளே, ஆண்டவரில் உங்கள் பெற்றோருக்குக் கீழ்ப்படியுங்கள் - இதுவே தேவைகளுக்கு ஏற்புடையது. வாக்குறுதியோடு இணைந்த முதலாவது கட்டளை இதுவே: உன் தந்தையையும் தாயையும் மதித்து நட, மேலும் அந்த வாக்குறுதி: அதனால் நீ நெடிய வாழ்வையும் நிலத்தில் செழிப்பையும் கொண்டிருப்பாய்."

24. பிள்ளைகள் தங்களது மண்ணகத் தந்தையரை (மற்றும் தாய்மாரை) மதிக்க வேண்டும், ஏனெனில் தந்தையாம் கடவுளே அவர்களின் பெற்றோர்நிலைக்கு ஆதாரம். கதிம 2214ல் கூறியுள்ளது போன்று, "இறைத் தந்தைமையே மனிதத் தந்தைமைக்கு ஆதாரமாகும்."

25. பிள்ளைகள் தங்களின் வாழ்வு முழுவதும் தங்களின் பெற்றோரைக் குறித்து அக்கறை கொள்ளக் கடமைப்பட்டுள்ளனர். தங்களின் பெற்றோர் கடினங்களையும் தனிமையையும், சிறப்பாகத் தங்களின் முதிர்ந்த வயதில் அனுபவிக்கும் பொழுது அவர்கள் அக்கறையோடு கவனித்துக் கொள்ள வேண்டும். அன்பு, நன்றியுணர்வு, மற்றும் தாழ்ச்சியால் வெளிப்படுத்தத் தகுந்த மனப்போக்கு இதுவே.

26. கடவுள் நமக்கு மேலாக அதிகாரநிலையில் வைத்திருக்கிறவர்களுக்கான நன்றியுணர்வு மற்றும் மரியாதை முக்கியமானது என்பது இந்தக் கட்டளையைப் பற்றி நாம் புரிந்துகொள்ள வேண்டிய முக்கிய அம்சமாகும். இதன் காரணமாக, நமது குடும்பங்களில் உள்ள பெரியோர், நமது மூத்தோர் மற்றும் முன்னோர், நமது ஆசிரியர்கள், நமக்கு வேலைவழங்குவோர், நமது தலைவர்கள், நமது நாட்டை ஆளுவோர் அனைவருக்கும் இந்தக் கட்டளையின் விதிமுறைகள் விரிவடையும் (கதிம 2199).

27. பிள்ளைகள் தங்களின் பெற்றோருக்கு மரியாதை அளிக்கக் கற்பது முக்கியமானது, ஏனெனில் தங்களின் பெற்றோருக்கு மதிப்பளிக்கக் கற்பதில் இருந்து மற்றவர்களை மதிப்பதன் முக்கியத்துவத்தையும் அவர்கள் கற்கின்றனர்.

*கதிம 2212:* "நான்காம் கட்டளை சமூகத்திலுள்ள மற்ற உறவுநிலைகளுக்கு ஒளியூட்டுகிறது. நமது சகோதர சகோதரிகளில் நமது பெற்றோரின் பிள்ளைகளை; நமது உறவினரில் நமது முன்னோர்களின் வழிமரபினரை; நமது உடன் குடியாளர்களில், நமது நாட்டின் பிள்ளைகளை; திருமுழுக்கு பெற்றவர்களில், தாய்த் திருச்சபையின் பிள்ளைகளை; ஒவ்வொரு மனிதரிலும், 'நமது தந்தை' என்று அழைக்கப்பட விரும்புகிறவரின் மகனை அல்லது மகளை நாம் காண்கிறோம். இவ்விதமாக நமக்கு அடுத்திருப்போருடனான நமது உறவுநிலைகள் நபர்சார் பண்பில் கண்டுணரப்படுகின்றன. அடுத்திருப்பவர் என்பவர் மொத்த மனிதரில் ஓர் 'அலகு' அன்று; அவர் தமது தொடக்கத்தின் வழியாக குறிப்பிட்ட கவனம் மற்றும் மரியாதையை விரும்புகின்ற 'ஒருவராக' இருக்கிறார்."

28. **ஐந்தாம் கட்டளை: "கொலை செய்யாதே."** (விப 20:13, இச 5:17)

29. வாழும் படைப்புயிரி அனைத்தும் தனது வாழ்வைப் பாதுகாக்கும் இயல்பான உள்ளுணர்வு கொண்டுள்ளது. பகுத்தறியும் மனம் கொண்ட படைப்புயிரிகளான மனிதர்கள் நடுவே, ஒரு தனிநபரின் வாழ்வை மற்றவர் பறிக்கக்கூடாது என்ற புரிதல் இருக்க வேண்டும்.

30. வாழ்வு எல்லாம் புனிதமானது, ஏனெனில் அதன் இருப்பின் ஆதாரமாக கடவுள் இருக்கிறார். இதன் காரணமாக, ஒவ்வோர் உயிருக்கும் அதன் படைப்பாளரோடு உறவுநிலை இருக்கிறது. ஆனால் மனிதர், கடவுளின் உருவிலும் சாயலிலும் படைக்கப்பட்டுள்ளதால், அவரோடு ஒரு சிறப்பான உறவுநிலையைக் கொண்டுள்ளார், ஆகவே உள்நிலை மாண்போடு படைக்கப்பட்டுள்ளார்.

*கதிம 22:58:* ''மனித வாழ்வு புனிதமானது, ஏனெனில் அதன் தொடக்கத்தில் இருந்து கடவுளின் படைப்புச் செயலில் ஈடுபட்டுள்ளதுடன், அதன் ஒரே முடிவான படைப்பாளருடனான சிறப்பு உறவுநிலையில் என்றென்றும் தொடர்ந்திருக்கிறது. கடவுள் மட்டுமே தொடக்கத்தில் இருந்து முடிவு வரை வாழ்வின் ஆண்டவராக இருக்கிறார்: எவரும் எந்தச் சூழ்நிலையிலும் ஒரு மாசற்ற மனிதரை நேரடியாக அழிக்க உரிமை கோர முடியாது.''

31. மனித வாழ்வில் புனிதநிலையின் இயல்பானத் தரம் ''வாழ்வின் புனிதத்துவம்'' என்று அழைக்கப்படுகிறது. கிறிஸ்து வழியாக, நாம் பேறுநிறை திரித்துவத்தின் வாழ்வில் நாம் பங்கு கொள்கிறோம், ஆகவே நாம் ஒவ்வொருவரும் மட்டுமீறிய ஒரு தகுதியைக் கொண்டுள்ளோம். ஆகவே மனித வாழ்வின் பாதுகாப்பு என்பது மீறக்கூடாத ஓர் உரிமையாகவும், சரியாகச் சிந்திக்கும் ஒவ்வொரு மனிதரின் கடமையாகவும் இருக்கிறது.

*மகிழ்ச்சியும் எதிர்நோக்கும்,* 27: ''வாழ்வுக்கு எதிரான எதுவும், எவ்விதமான கொலை, இனப் படுகொலை, கருக்கலைப்பு, கருணைக்கொலை மற்றும் விருப்பத் தற்கொலை போன்றவை அனைத்தும் அவற்றைப் போன்ற மற்றவையும் உண்மையில் தீச்செயல்கள். அவை மனிதச் சமூகத்திற்கு நஞ்சிடுகின்றன, அவற்றைச் செய்வோருக்கும் அதனால் துன்புறுவோருக்கும் அதிகத் தீங்கு விளைவிக்கின்றன. மேலும், அவை படைப்பாளருக்கு உச்ச அவமதிப்பாக இருக்கின்றன.''

32. மனித வாழ்வு குழந்தை பிறப்பதில் இருந்து தொடங்குவதில்லை. உண்மையாக தனது தாயின் வயிற்றில் ஒரு குழந்தை கருவாக உருவாகும் நிமிடத்திலே தொடங்குகிறது. ஆகவே இந்தக் குழந்தையின் வாழ்வு சிறந்த அக்கறை மற்றும் பாதுகாப்பால் காக்கப்பட வேண்டும், அது ஒரு நபராக நடத்தப்பட வேண்டும் (கதிம 2270). கருவைக் கலைத்தல் அல்லது புதிதாகப் பிறந்த சிசுவைக் கொல்லுதல் என்பவை கடவுளுக்கும் மனிதருக்கும் எதிரான ''பேசப்படாதக் குற்றங்கள்'' (*மகிழ்ச்சியும் எதிர்நோக்கும்,* 51). ஒரு பிறக்காதக் குழந்தையாக இருந்தாலும், அது பிறந்தப் பிறகு வளர்ப்பது சிரமம் என்பதாலும், மனித வாழ்வைப் பறிக்க எவருக்கும் உரிமையில்லை.

33. பல மனித உயிர்களைக் கட்டாயமாகப் பறிக்கும் போர்ச் சூழல்களில், வாழ்வின் புனிதத்தைப் பாதுகாக்க மனிதகுலம் தவறுகிறது. இதன் காரணமாகவே திருச்சபை இவ்வாறு கூறுகிறது: ''ஒவ்வொரு போரும் பாகுபாடின்றி முழு நகர்களை அல்லது பரந்தப் பகுதிகளை அவற்றின் மக்களோடு அழிப்பது கடவுளுக்கும் மனிதருக்கும் எதிரானக் குற்றமாகும்'' (*மகிழ்ச்சியும் எதிர்நோக்கும்,* 80).

அத்தகையச் சூழல்களில், நீதியற்ற முறையில் தாக்கப்படுவோர் தடுப்புமுறையில் தங்களைப் பாதுகாத்துக் கொள்ள உரிமை கொண்டுள்ளனர். சமூகத்தில் நீதியைப் பாதுகாக்கும் பொறுப்புள்ளோரும் தாக்கப்படும் உதவியற்றோரைப் பாதுகாக்க உரிமை கொண்டுள்ளனர். போர் செய்வோரிடம் இருந்து உதவியற்ற மக்களின் வாழ்வைப் பாதுகாப்பதில் மற்றவர்களின் உயிர்கள் பறிக்கப்பட்டாலும், உயிர்களைப் பறிப்பதன்று மாறாக வலுவற்றோரின் வாழ்வைப் பாதுகாப்பதே அதன் நோக்கம்; இது ''இரட்டை விளைவு'' கொள்கை என்று அறியப்படுகிறது (கதிம 2263). அவசியமான இடத்தில், நீதியற்றத் தாக்குதலுக்கு எதிராக மனித வாழ்வைப் பாதுகாக்கிற மற்றும் காப்பாற்றுகிற நோக்கத்துடன் அதிகாரத்தில் உள்ளோர், மற்றும் சமூகப் பாதுகாப்பு குறித்த பொறுப்பு வழங்கப்பட்டோருக்கு ஆயுதங்களைப் பயன்படுத்துவதும் அனுமதிக்கப்பட்டது (கதிம 2265).

34. நேரடியாகவும் நோக்கத்துடனும் கொலை செய்வது சாவானப் பாவம் என்பதைத் தற்போது நாம் புரிந்து கொண்டுள்ளோம் (கதிம 2268). எனினும், மறைமுகமாக ஒரு நபருக்கு இறப்பைக் கொணர்வதையும் இந்தக் கட்டளை தடை செய்கிறது. தகுந்த நியாயமின்றி ஒருவரின் வாழ்வை ஆபத்துக்கு உள்ளாக்குவது, மற்றும் வாழ்வு ஆபத்தில் உள்ள ஒருவருக்கு உதவ மறுப்பது ஆகியவற்றை அறநெறி சார்ந்து இந்தக் கட்டளை தடை செய்கிறது (கதிம 2269).

35. **ஆறாம் கட்டளை: "விபச்சாரம் செய்யாதே."** (விப 20:14, இச 5:18)

திருச்சபை எப்பொழுதும் பாலினத்தை புனித மெய்மையாகக் கருதி வருகிறது. மனிதப் பாலினநிலை கடவுளால் படைக்கப்பட்டது, மேலும் அது திருமணம் மற்றும் இனப்பெருக்க நோக்கத்திற்காகப் படைக்கப்பட்டது. கணவன் மனைவி ஆகின்ற ஆண் மற்றும் பெண்ணுக்கு இடையிலான அன்பு நேர்மையானதாக இருக்க வேண்டும், மேலும் அவர்களின் பாலினநிலை அதே போன்று நேர்மையாகவும் ஊடிடை அர்ப்பணத்தோடும் காக்கப்பட வேண்டும். நம்பகமான மற்றும் நிலைத்த திருமண அர்ப்பணத்தின் வரம்புகளினுள் மட்டுமே பாலுறவு நிகழ வேண்டும்.

36. ஒப்பந்தம் செய்யப்பட்ட ஒருவர் மற்றவரைத் திருமணம் செய்யாத இணையரும் கூட, ஒருவர் மற்றவருடன் உண்மையாகத் திருமணம் நிகழும் வரை பாலுறவுச் செயல்பாட்டில் விலகியிருக்க அழைக்கப்படுகின்றனர்.

*கதிம 2350:* "திருமண ஒப்பந்தம் செய்யப்பட்டோர் தன்னடக்கத்தோடு கற்புடன் வாழ்வதற்கு அழைக்கப்படுகின்றனர். அவர்கள் இந்நேரத்தில் ஊடிடை மரியாதையைக் கண்டடைதல், நம்பகத்தன்மையில் பயிற்சி பெறுதல், ஒருவர் மற்றவரை கடவுளிடம் இருந்து பெறுவதற்கான எதிர்நோக்கு ஆகியவற்றைச் சோதித்துப் பார்க்க வேண்டும். அவர்கள் திருமண அன்பைச் சார்ந்த பற்றுதலின் வெளிப்படுத்தல்களை திருமணத்திற்காக ஒதுக்கி வைக்க வேண்டும். ஒருவர் மற்றவர் கற்பில் வளர அவர்கள் உதவ வேண்டும்."

37. பாலினநிலையின் படைப்பாற்றல் அம்சம் குறித்து புனித மறைநூலும் கற்பிக்கிறது. "கடவுள் தம் உருவில் மனிதரைப் படைத்தார், கடவுளின் உருவிலேயே ஆணும் பெண்ணுமாக அவர்களைப் படைத்தார். கடவுள் அவர்களுக்கு ஆசியளித்து, 'பலுகிப் பெருகி மண்ணகத்தை நிரப்புங்கள், மேலும் அதைக் கீழ்ப்படுத்துங்கள்…' என்றார் (தொநூ 1:27-28). பாலியல் செயல்பாடு என்பது அர்ப்பண அன்பை வெளிப்படுத்தும் நோக்கத்திற்கான மட்டுமன்று, ஆனால் அத்தகைய அன்பின் வழியாக, புதிய நபர்களை உருவாக்குவதும் ஆகும் (அதாவது, குழந்தைப் பிறப்பு). ஆகவே, எல்லா பாலியல் செயல்பாடும் வாழ்வுக்குத் திறந்தநிலையோடு இணைந்திருக்க வேண்டும். கணவனும் மனைவியும் பாலியல் செயல் வழியாக, மற்றும் வாழ்வுக்குத் தங்களின் திறந்தநிலை வழியாக ஒருவர் மற்றவரோடு ஒன்றித்து குழந்தைகளைப் பெற்றெடுக்கின்றனர். அவர்கள் ஒரு குடும்பமாக இணைந்து இக்குழந்தைகளை வளர்க்கவும், அவர்களுக்கு கல்வி அளிக்கவும் தங்களை அர்ப்பணிக்க வேண்டும்.

38. மனிதப் பாலினநிலைக்கான கடவுளின் இறைத் திட்டத்திற்கு வெளியே நிகழும் எந்த வடிவிலான பாலியல் நடத்தையும் இந்தக் கட்டளையை மீறுகிறது. தான் திருமணம் செய்யாத மற்றொருவருடனான எந்த பாலியல் செயல்பாடும் மனிதப் பாலினநிலைக்கான கடவுளின் வடிவமைப்பு மீதானத் தாக்குதலாகவும், ஓர் முறைகேடாகவும் சீரழிவாகவும் இருக்கிறது.

39. அர்ப்பணமுள்ளத் திருமண உறவுநிலைக்கு வெளியே நிகழும் திட்டமிடாத பாலுறவு தனிநபர் மற்றும் சமூக நெருக்கடிக்கு இட்டுச் செல்கிறது. பல சமூகங்களில் இந்த மெய்மை திருமண முறிவு, குழந்தை முறைகேடு, பாலியல் நோய்கள், மற்றும் குறைந்த வயது சிறுமிகள் நடுவே பலத் தேவையற்ற கருவுறுதல்களுக்கு இட்டுச் செல்கின்றன. பொழுதுபோக்குத் தொழில், பாலின அறநெறியைப் பரப்புவதற்குப் பதில், நெறியற்ற மற்றும் திட்டமிடாதப் பாலுறவை முன்னிறுத்துவதில் பொறுப்பு வகிக்கிறது.

40. கத்தோலிக்கத் திருச்சபையின் மறைக்கல்வியும் கற்புக்கான அழைத்தல் பற்றி பேசுகிறது, அது ஒரு நபருக்குள்ளான பாலினநிலையின் வெற்றிகரமான ஒருங்கிணைப்பாக இருக்கிறது (கதிம 2348-59). ஒரு நபர் பக்குவமான விதத்தில் தற்கட்டுப்பாட்டோடு இருந்தால், அந்நபர் ஒருமைப்பாட்டுடன் மற்றவர்களை அன்பு செய்ய உண்மையில் சுதந்திரமாக இருக்கிறார். ஒரு நபர் தற்கட்டுப்பாடின்றி இருந்தால், உடலிச்சை, இழிவரைவு, விபச்சாரம், அல்லது கற்பழிப்பு போன்ற பாவம்நிறைச் செயல்களில் அந்நபர் ஈடுபடுகிறார் (கதிம 2351-56).

*கதிம 2345:* ‘‘கற்பு என்பது அறநெறி நற்பண்பு. அது கடவுளின் ஒரு கொடையாகவும், ஓர் அருளாகவும், ஆன்மிக முயற்சியின் ஒரு கனியாகவும் இருக்கிறது. திருமுழுக்குத் தண்ணீரால் மறுபிறப்பு அளிக்கின்ற தூய ஆவியாரே, ஒருவரை கிறிஸ்துவின் தூய்மையைப் பின்பற்றச் செய்கிறார்.’’

*கதிம 2349:* ‘‘மக்கள் தங்கள் வாழ்வின் நிலைக்குப் பொருத்தமான விதத்தில் கற்பைப் பண்படுத்த வேண்டும். சிலர் கன்னிமை அல்லது அர்ப்பணத் துறவை மொழிகின்றனர், அது குறிப்பிட்ட விதத்தில் பிளவுபடாத இதயத்தோடு கடவுளுக்குத் தங்களை வழங்கச் செய்கிறது. மற்றவர்கள் திருமணமானவர்களாகவோ அல்லது தனியாகவோ இருந்தாலும் எல்லாருக்குமான அறநெறிச் சட்டத்திற்கு ஏற்ப வாழ்கின்றனர். திருமணமான மக்கள் மணவாழ்வுக்குரியக் கற்பை வாழ அழைக்கப்படுகின்றனர்; மற்றவர்கள் தன்னடக்கத்தோடு கற்பை வாழ வேண்டும்.’’

41. **ஏழாம் கட்டளை: “களவு செய்யாதே.”** (விப 20:15, இச 5:19)

நீதிக்கான கடவுளின் அக்கறையை இந்தக் கட்டளை பிரதிபலிக்கிறது. மற்ற மக்களுக்குச் சொந்தமான உடைமைகளை எடுக்க, அவற்றை நமக்கென வைத்திருக்க அல்லது அவற்றைச் சேதப்படுத்த நமக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. படைக்கப்பட்டப் பொருட்கள் மீது நாம் அக்கறை கொள்ள வேண்டும், மேலும் அவற்றை கடவுள் மற்றும் அடுத்திருப்பவருக்கான அன்புச் சேவையில் பயன்படுத்த வேண்டும் என நீதி கோருகிறது. மற்ற வார்த்தைகளில், மண்ணகப் பொருட்களைப் பொது நலத்திற்காகப் பயன்படுத்த வேண்டும் (கதிம 2401).

42. மண்ணகப் பொருட்களைச் சரியாகப் பயன்படுத்துவது குறித்துக் கற்பிக்கத் திருச்சபை முயற்சி எடுக்கிறது, ஏனெனில் அது மற்ற நபர்களுடனான நமது உறவுகளைப் பாதிக்கிறது. மக்கள் தங்களுக்கு உரியதை வைத்திருக்க உரிமை கொண்டுள்ளனர், ஏனெனில் இந்தப் பொருட்கள் அவர்களின் தேவைகள் மற்றும் அவர்கள் குடும்பங்களின் தேவைகளைச் சந்திக்க அவசியமானவை. ஆனால் பரந்த அளவில், மண்ணகப் பொருட்களைச் சரியாகப் பிரித்தளிக்க வேண்டும், அதனால் உலகில் உள்ள ஒவ்வொரு நபரின் அடிப்படைத் தேவைகளும் சந்திக்கப்படும். அத்தகைய உரிமைகள் மதிக்கப்படாத பொழுது, பொருளாதார நீதியின்மை இருக்கும், அது குறிப்பிட்ட மக்களுக்கு அதிகத் துன்பத்தை ஏற்படுத்தும்.

43. எல்லா மக்களின் பொது நலனை எப்பொழுதும் கருத்தில் கொண்டே மண்ணகப் பொருட்களைப் பிரித்தளிக்க வேண்டும். நமது தேவையானதை விட அதிகமானதை நாம் கொண்டிருந்தால், நமது சொந்த நுகர்வைக் கட்டுப்படுத்தி, நமது உடைமையில் எஞ்சியதை மற்ற மக்களின் தேவைகளில் அக்கறை செலுத்தப் பயன்படுத்த வேண்டும்.

*கதிம 2405:* ‘‘பயன்பாடு மற்றும் நுகர்வுக்காகப் பொருட்களை வைத்திருப்போர் அவற்றை நிதானமாகப் பயன்படுத்த வேண்டும், சிறந்தப் பகுதியை விருந்தினர்கள், நோயுற்றோர் மற்றும் ஏழைகளுக்காக ஒதுக்கிவைக்க வேண்டும்.

44. உயிரற்றவை மற்றும் உயிரினங்கள் மீது ஆதிக்கம் செலுத்த கடவுளிடம் இருந்து பெற்ற மனிதர்களின் உரிமையைத் தவறாகப் பயன்படுத்தக்கூடாது. இந்த உரிமை ஒப்பற்றது அன்று, அதாவது இன்னும் பிறக்காத வரவிருக்கும் தலைமுறையினர் உள்பட, மற்ற மக்களுக்கு கேடு விளைவிக்க இந்த உரிமையைத் தவறாகப் பயன்படுத்த முடியாது.

45. தங்களுக்கு அடிப்படைத் தேவைகள் குறைவுபடுவதாலும், தன்னலச் சமூகம் தங்களுக்கு உதவி வழங்க மறுப்பதாலும் தங்களுக்கு சொந்தமற்றதை மக்கள் தமக்குரியதாகக் கண்டு எடுத்துக்கொள்ளும் நேரங்கள் இருக்கின்றன. அத்தகையச் சூழல்களில், அவர்கள் களவு செய்ததாகக் கருதப்படுவதில்லை.

கதிம 2408: ‘‘ஏழாம் கட்டளை திருட்டை (களவு), அதாவது, உரிமையாளரின் நியாயமான விருப்பத்திற்கு எதிராக அவரது உடைமையைப் பறிப்பதைத் தடை செய்கிறது. ஒப்புதலை ஊகிக்க முடிந்தால் அல்லது பகுத்தறிவுக்கு முரணாக மற்றும் பொருட்களின் உலகளாவிய முடிவுக்கு மறுப்பு இருந்தால் எந்தக் களவும் இல்லை. வெளிப்படையான மற்றும் அவசரத் தேவைக்குரிய விடயத்தில், உடனடியாக, இன்றியமையாதத் தேவைகளை (உணவு, உடை, இருப்பிடம்…) வழங்குவது மட்டுமே ஒரே வழியாக இருந்தால், ஒருவரை அகற்றலாம் மேலும் மற்றவர்களின் உடைமையைப் பயன்படுத்தலாம்.’’

46. **எட்டாம் கட்டளை: "பிறருக்கு எதிராகப் பொய்ச் சான்று சொல்லாதே."** (விப 20:16, இச 5:20)

இந்தக் கட்டளை நமது தொடர்பில் உள்ள உண்மையைக் கையாள்கிறது. நம்மோடும் பிறரோடும் நேர்மையின் ஆவியில் எப்பொழுதும் உண்மையைத் தேடவும் பேசவுமான கடமை நமக்கு இருக்கிறது. உண்மைக்கான இந்த ஊடிடை அர்ப்பணம் இன்றி, நீதியுள்ளச் சமூகம் சாத்தியமற்றது. மக்கள் ஒருவர் மற்றவருக்கு உண்மையாக இருக்க முடியவில்லை எனில் நாம் சரியாக இணைந்து வாழ முடியாது (கதிம 2469). மக்களிடம் அல்லது மக்களைப் பற்றி உள்நோக்கத்துடன் உண்மையற்றதைக் கூறுவது பாவம், ஏனெனில் அது ஊடிடை நம்பிக்கை மற்றும் உண்மையின் மீது கட்டப்பட்ட நமது மனிதப் பிணைப்புகளை அழிக்கிறது.

47. பொய்யானச் சான்று அல்லது சாட்சியம் வழங்குவது என்பது உள்நோக்கத்துடன் உண்மையைச் சிதைப்பது அல்லது பொய்களைச் சொல்வது அல்லது கேட்பவரை ஏமாற்றும் உள்நோக்கத்துடன் ஒருவரைக் குறித்து பொய்யுரைப்பது. அத்தகைய பொய்யானச் சான்று அல்லது சாட்சியம் ஏற்க முடியாதது, ஏனெனில் "கடவுள் உண்மையாக இருக்கிறார்… தமது மக்களின் உறுப்பினர்கள் உண்மையில் வாழ அழைக்கப்படுகின்றனர்" (கதிம 2465).

கதிம 2482: "'ஏமாற்றும் உள்நோக்கத்துடன் தவறானதைப் பேசுவதே பொய்யாகும்.' பொய் கூறுதலை அலகையின் வேலை என்று ஆண்டவர் கண்டிக்கிறார்: 'நீங்கள் உங்களது தந்தையான அலகையைச் சேர்ந்தவர்கள்… அவனிடம் உண்மை இல்லை. அவன் பொய்கள் பேசும்போது, தனது சொந்த இயல்புக்கேற்பவே பேசுகிறான், ஏனெனில் அவன் பொய்யனாகவும் பொய்களின் தந்தையாகவும் இருக்கிறான்.'"

*எபேசியர் 4:23-25 (கதிம 2475):* "உங்கள் மனம் ஆவியில் புதுப்பிக்கப்பட்டதாக வேண்டும், அதனால் கடவுளின் விதிகளில், உண்மையின் நீதியிலும் தூயநிலையிலும் உருவாக்கப்பட்டப் புதிய மனிதனை நீங்கள் அணிந்துகொள்ள முடியும். ஆகவே தற்போது முதல், பொய்கள் எதுவும் இருக்கக்கூடாது. நாம் எல்லாரும் ஒருவர் மற்றவரின் பகுதிகளாய் இருப்பதால், ஒருவர் மற்றவரிடம் உண்மையைப் பேசுவோம்."

48. பொய்யின் தீவிரத்தை அது சிதைத்த உண்மையின் இயல்பு, பொய் சொல்லப்பட்டச் சூழல்கள், பொய் சொல்கிறவரின் உள்நோக்கங்கள், மற்றும் அதனால் பாதிக்கப்பட்டோருக்கு அது ஏற்படுத்தியத் தீங்கு ஆகியவற்றைக் கொண்டு அளவிடலாம். பொய்யானது நீதி மற்றும் அன்பு என்ற நற்பண்புகளைத் தீவிரமாக மீறும் பொழுது, அற்பப் பாவமானது சாவானப் பாவமாக மாறும் (கதிம 2484).

49. எனினும், ஒருபோதும் பொய்ச்சான்று கூறக்கூடாது என்ற இந்தக் கட்டளைக்கு, மக்களின் அந்தரங்க உரிமையை மதிக்காமல், அனைவரையும் பற்றி அனைத்தையும் அறிகின்றக் கட்டுப்பாடற்ற உரிமை அனைவருக்கும் வழங்கப்பட்டுள்ளது என்பது பொருளாகாது. மக்களின் நன்மை மற்றும் பாதுகாப்புக்காக, அல்லது நற்பெயருக்கு உள்ள உரிமையைப் பாதுகாக்க, மற்றவர்கள் அறியக்கூடாதைக் குறித்து நாம் அமைதியாக இருக்க வேண்டிய நேரங்கள் இருக்கின்றன (2488-89).

50. தொழில்நுட்பம் முன்னேற்றத்தால், சமூகத்துக்குத் தகவலைப் பரப்புவதில் ஊடகம் முக்கியப் பங்கு வகிக்கிறது. ஊடகம் பரப்புகின்றத் தகவல் சமூகத்தில் பொது நன்மையை ஏற்படுத்த வேண்டும் (கதிம 2494). முக்கிய விடயங்களில் பொதுமக்களின் கருத்தில் தாக்கம் ஏற்படுத்தும் தவறானச் செய்தியை முன்னிறுத்த ஊடகத்தைப் பயன்படுத்தினால் பிரச்சனை எழுகிறது. ஊடகமும் அடிக்கடி அதன் சித்தரிப்பின் வழியாக அறநெறி குறித்த மக்களின் புரிந்துணர்வைச் சிதைக்கிறது. ஊடகப் பயனர்கள் மற்றும் ஊடகம் முன்னிறுத்தும் தகவலைப் பெறுவோர், எது நம்பத்தகுந்தது என தெளிதேர்வு செய்ய வேண்டும்.

கதிம 2496: "சமூகத் தொடர்புக் கருவிகள் (சிறப்பாக மக்கள் ஊடகம்) பயனர்கள் நடுவே குறிப்பிட்ட செயலின்மையை எழுப்பவும், சொல்ல அல்லது காட்டப்படுவதன் விழிப்பற்ற வாடிக்கையாளர்களாக மாற்றவும் முடியும். வெகுமக்கள் ஊடகத்திற்கான அணுகுமுறையில் பயனர்கள் நிதானத்தையும் ஒழுக்கத்தையும் கடைபிடிக்க வேண்டும். நலமற்றத் தாக்கங்களை

மிக எளிதாகத் தடுக்க அறிவொளி பெற்றச் சரியான மனச்சான்றுகளை உருவாக்க அவர்கள் விரும்புவர்.''

51. **ஒன்பதாம் கட்டளை: "பிறர் மனைவி மீது ஆசை கொள்ளாதே."** (விப 20:17, இச 5:21)

நமது அறநெறி வாழ்வு நமது இதயத்தின் நிலையோடுத் தொடங்குகிறது. நன்மை தீமைக்கு இடையிலானப் போராட்டம் மனித இதயத்தில் நடைபெறுகிறது. ஒன்பதாம் மற்றும் பத்தாம் கட்டளைகள் நமது வெளிப்புறச் செயல்களை விட இதயத்தில் நிகழ்வதைக் கையாள்கின்றன. இது ஏனெனில் மனிதர் ''ஆவியும் உடலும் இணைந்தவராக இருக்கிறார்'' (கதிம 2516). நமது வெளிப்புறச் செயல்களில் மட்டுமின்றி, நமது உட்புற நோக்கங்கள் மற்றும் எண்ணங்களிலும் நாம் விழிப்புணர்வோடு இருக்க வேண்டும்.

52. ஆறாம் கட்டளை செயலின் புறநிலை தூய்மைக்கு நம்மை அழைக்கிற அதே விதத்தில், ஒன்பதாம் கட்டளை இதயத்தின் அகநிலை தூய்மைக்கு நம்மை அழைக்கிறது

*கதிம 2517:* ''இதயமானது அறநெறி ஆளுமையின் இருக்கையாக இருக்கிறது: 'இதயத்தில் இருந்தே தீய சிந்தனைகள், கொலை, விபச்சாரம், பரத்தைமை… ஆகியவை வருகின்றன. உடல்சார் பேராசைக்கு எதிரானப் போராட்டம் இதயத்தைத் தூய்மைப்படுத்தி தன்னடக்கத்தை செயலாக்குகிறது…''

53. நாம் திருமுழுக்கு பெற்று, எல்லா பாவங்கள் இருந்து தூய்மைப்படுத்தப் பெற்றிருந்தாலும், சிற்றின்ப ஆசை எஞ்சியுள்ளது, அது நம்மை எஞ்சியப் பாவம்நிறை ஆசைகளுடன் போராடச் செய்கிறது.

கதிம 2520: ''திருமுழுக்கு அதைப் பெறுகிறவருக்கு எல்லா பாவங்களில் இருந்து தூய்மை பெறும் அருளை வழங்குகிறது. ஆனால் திருமுழுக்கு பெற்றோர் உடலின் சிற்றின்ப ஆசை மற்றும் முறையற்ற ஆசைகளுக்கு எதிராகத் தொடர்ந்து போராட வேண்டும்.''

பாவம் செய்யும் ஆசைக்கு எதிராகப் போராட, நமது இதயங்களில் நாம் ஒழுக்கமாக இருக்க வேண்டும். திருச்சபை இந்த ஒழுக்கத்தைப் ''மிதநிலை'' என்று அழைக்கிறது (கதிம 2522), அதனால் நலமற்ற ஆர்வத்தால் நாம் சோதனையை ஊக்குவிக்கக் கூடாது அல்லது அதில் மற்றவர்களை விழச்செய்யக் கூடாது.

54. தொடர்பு ஊடகங்கள் இன்று வழங்கும் கருத்துகள் மற்றும் உருவங்களில் மிதநிலை குறைவுபடுவதைக் குறித்து நாம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். ஊடகத்தில் ''மரியாதை மற்றும் கட்டுப்பாட்டுக்கான அக்கறை'' குறைவுபடுகின்றப் பொதுவான நிலையில், அது தங்கள் இதயங்களை எப்படி பாதிக்கிறது என்பது குறித்து மக்கள் ஒருபோதும் சிந்திப்பதில்லை (கதிம 2525).

55. **பத்தாம் கட்டளை: "பிறருக்கு உரியது எதையும் கவர்ந்திட விரும்பாதே."** (விப 20:17, இச 5:21)

56. கிறிஸ்தவர்களாக, இந்த உலகை மனிதச் சமூகத்துக்கு சிறந்த இடமாக ஆக்குவதில், கடவுள் நமக்கு வழங்கியச் சுதந்திரத்தில் நம்மையும் மற்றவர்களையும் பொறுப்போடு வாழச் செய்வதில் நம்மையே கடவுளின் ஒத்துழைப்பாளர்களாக நாம் பார்க்க வேண்டும். கடவுளின் ஒத்துழைப்பாளர்களாக நமது கடமையைச் செய்ய, நமது தெரிவுகளையும் நாம் எப்படி இந்த தெரிவுகளைச் செய்தோம் என்பதையும் நாம் நிலையாக ஆய்ந்தறிய வேண்டும். கடவுளை மகிழ்ச்சிப்படுத்தும் தெரிவுகளை நாம் செய்வதை உறுதிப்படுத்த நம் ஆண்டவர் கிறிஸ்துவின் மனநிலைக்கு ஒத்திருப்பதே நமக்கு ஒரே வழி. கடவுள் காண்பது போல் காண்கின்ற, கடவுள் அன்பு செய்வது போல் அன்பு செய்கின்ற, இயேசு கிறிஸ்துவைப் போல் இருக்கின்றத் திறனை இறுதியாக அடைய நமது இதயங்கள் போராடுகின்றன.

*உரோமையர் 12:2:* ''சமகால உலகிற்கேற்ப உங்கள் நடத்தை அமைய வேண்டாம், மாறாக உங்கள் மனங்களின் புதுப்பித்தல் உங்களை உருமாற்றட்டும், அதனால் கடவுளின் விருப்பம்

என்ன -- நல்லது, ஏற்புடையது மற்றும் பக்குவமானது என்ன என்று நீங்கள் தெளிதேர்வு செய்யலாம்.''

57. பத்தாம் கட்டளை பொருட்களைச் சொந்தமாக்கும் மிதமற்ற வேட்கையில் இருந்து வளரும் நமது கட்டுப்பாடற்றப் பேராசையைக் கையாள்கிறது. ''தான்மை எல்லா வேட்கைகள் மற்றும் ஆசைகளில்'' (கலாத்தியர் 5:24) இருந்து விடுபட்டு இருக்க அது நமக்கு கட்டளையிடுகிறது.

58. இந்தக் கட்டளை உண்மையாக நிலையான மனமாற்றம் மற்றும் உருமாற்றத்தின் பாதையில் தொடர நம்மில் தங்களை கடவுளைச் சார்ந்த மக்களாகக் கருதுவோருக்கான ஒரு சுருக்க அழைப்பாகும், அதனால் உட்புறத்தில் கிறிஸ்துவைப் போலாகி, அதன் விளைவாக வெளிப்புறத்தில் அதை வெளிப்படுத்துவோம். இவ்விதமாக, நமது நடத்தைக்கு ''ஆவியார் வழிகாட்டுவார்'' (கலா 5:25).

59. கிறிஸ்தவர்களாக இயேசு கிறிஸ்துவில் நாம் கொண்டுள்ள சுதந்திரத்திற்கு அறநெறி கட்டுப்பாடின்மை என்று பொருளன்று. நாம் உண்மையில் சுதந்திரத்தை துய்க்க விரும்பினால், நம்மையே அறநெறிச் சட்டங்களில் உருவாக நாம் அனுமதிக்க வேண்டும், அதனால் நமது சுதந்திரம் தண்டனைக்குப் பதிலாக என்றுமுள்ள மகிழ்ச்சி மற்றும் மீட்புக்கு நடத்திச் செல்லும் (கதிம 2526).

60. இயேசு கிறிஸ்துவின் நற்செய்திக்கு ஏற்ப வாழ்வது என்றால் நமது வீழ்ச்சிநிலையைப் புதுப்பிக்கவும் உருமாற்றவும் அனுமதிப்பது என்று பொருள், அதனால் நமது வாழ்வில் பாவத்தின் கவர்ச்சியை முறித்து சிறந்த மக்களாக வெளிப்படுவோம் (கதிம 2527).